மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் போதுமான அல்லது தேவையான பணியாளர்கள் இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைக்குமேயானால், உடனடியாக அது கவனிக்கப் படும்.

9-10 மணி

திரு. கி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையிலே பணியாற்றக்கூடிய ஊழி யர்களுக்கு, தற்போது வழங்கப்படக்கூடிய சீருடைகள் மிகவும் மோட்டா ரகமான உடைகளாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, காவல்துறைக்கு அளிப்பது போல் அவர்களுக்கும் டெரிக்காட்டன் போன்ற சீருடைகள் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தீயணைக்கும் பணி யிலே ஈடுபடுகின்றவர்களுக்கு எத்தகைய உடை இருக்கவேண்டும் என்று எண்ணிப்பார்த்துத்தான் அத்தகைய உடைகள் வழங்கப் படுகின்றன.

சொத்து வரி மாற்றி அமைத்தல்.

*7867. திரு ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :

(அ) தற்போது சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப் பட்டுள்ள பல்வேறு பஞ்சாயத்துக்களில் சொத்து வரி மாற்றி அமைப்பது குறித்து கணக்கெடுப்பு நடத்த சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1990 மே 5]

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சென்னை மாநகரத்தினுடைய சொத்து வரி விதிப்பினுடைய முறை சரியான முறையிலே கணக்கிடப்படவில்லை. நீண்ட காலத்திற்கு முன்னால் கணக்கிடப்பட்டது. தற்போது சென்னை நகரத்தில் சேர்ந்துள்ள பகுதிகளையும் சேர்த்து பரிசீலனை செய்கின்றபோது, சென்னை நகரத்திற்கு முழுமையாக அந்தந்தப் பகுதிக்கு அதிக அளவிலே அதிகாரிகளை நியமித்து இந்த சொத்து வரி விதிப்பு முறையை மாற்றியமைப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா? இதனை எப்போது செய்வதாக உத்தேசம்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த வரி விதிப்பை மாற்றி அமைக்கின்ற முறை இருக்கிறது. இருந்தாலும் 1979-80 ஆம் ஆண்டு முதல் அந்த முறை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் சொத்து வரி சம்பந்தப்பட்ட வகைகளில் ஒரு சரியான ஆய்வு, ஒரு நிரந்தரப் பரிகாரத்தை உருவாக்குவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அது முடிவுற்றவுடன் இந்த நிலை ஏற்படுத்தப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பல வறிய குடும்பங்கள், சுய வேலை வாய்ப்பு என்கிற முறையிலே ஒரு பெட்டிக்கடை அல்லது லாண்டரிக் கடை அல்லது தையல் கடை போன்ற தொழில்களைத் தங்கள் இல்லங்களிலேயே வைத்துச் செய்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் வணிக அடிப்படையிலே நடக்கக்கூடிய காரியங்களாகக் கருதப்பட்டு, சொத்து வரி அந்த அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே, இதுபோன்ற நலிந்த பிரிவினர்கள் சுய வேலைவாய்ப்புக்காகத் தொழில் நடத்தினாலும் அவர்களுக்குரிய சலுகையை அளித்து, சொத்து வரியைக் குறைப்பதற்கு அரசு முடிவுகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் அந்தப் பரிசீலனைக்குட்பட்டது தான். ஆனால் தற்போது இந்த மாமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தம் வர இருக்கிறது. 18 ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு எல்லாம் வரி விதிக்கலாம் என்று ஒரு விதி இப்போதிருக்கிறது. அது பொருளாதார நிலையையொட்டி, இப்போது 180 ஆக உயர்த்தப்படலாம் என்று இந்தப் பேரவையில் அந்தச் சட்டத் திருத்தம் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதற்குட்பட்டு, சிறிய நடுத்தர வர்க்கங்கள் எல்லாம் அதிலிருந்து விடுபடுவார்கள் என்று நான் கருதுகிறேன்.